www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

அரையாண்டுத் தேர்வு – 2024 +1

திருவள்ளூர் மாவட்டம்.

வரலாறு

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 X 1 = 20

| | |
|---|---|
| 1. (அ) வேளாண்மை | 11. (ஆ) காவிரி |
| 2. (இ) தூத்துக்குடி. | 12. (ஆ) துளசிதாசர் இராமசரிதத்தை இயற்றினார். |
| 3. (இ) மகதம். | 13. (ஈ) மதுரா விஜயம். |
| 4. (அ) அர்த்தசாஸ்திரம். | 14. (ஈ) தர்ம சேனர். |
| 5. (இ) இளஞ்சேட்சென்னி. | 15. (ஆ) குமரகுருபரர். |
| 6. (இ) உறையூர் | 16. (அ) அஷ்டபிரதானம். |
| 7. (அ) அரிக்கமேடு. | 17. (அ) கோவா. |
| 8. (அ) 4, 3, 1, 2 | 18. (ஆ) தாமஸ் மன்றோ. |
| 9. (அ) அத்வைதம் | 19. (இ) புதிய தலைப்பாகை. |
| 10. (அ) மொராக்கோ | 20 (இ). இராஜாராம் மோகன்ராய். |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 2 = 14

21. பெருங்குளம்: சிறு குறிப்பு வரைக.
- பெரும் குளம் என்பது முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளமாகும்.
- குளத்தின் நான்கு பக்கங்களிலும் நடைபாதை உள்ளது.
- நடைபாதையின் அருகே பல அறைகளும் உண்டு.

22. இந்தியாவின் இரும்புக்காலம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?
- வட இந்தியாவின் ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாட்டோடு ஒத்துப்போகிறது.
- இம்மட்பாண்டங்கள் தொடக்ககால அரசியல் உருவாக்க காலத்தைச் சேர்ந்தவை.
- தென் இந்தியாவில் ஈமச் சின்னங்களுடன் கூடிய பெருங்கற்காலப் பண்பாடாக உள்ளது.

23. மகாபத்ம நந்தர் பற்றி குறிப்பு வரைக
- நந்த வம்சத்தின் முதல் அரசர் ஆவார்.
- சிசுநாக அரசரைக் கொன்று அரியணையைக் கைப்பற்றினார்.
- நந்தர்களின் கீழ் பேரரசு நன்கு விரிவடைந்தது.

24. பண்டமாற்று முறையை விளக்கு
- பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள்கள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவில்லை.
- சிலர் விலையுயர்ந்த ஆபரணக்கற்களை பண்டமாற்றாகக் கொடுத்து மூலப் பொருள்களைப் பெற்றனர்.
- அம்மூலப் பொருள்கள் உற்பத்திப் பொருளாக மாற்றப்பட்டு வேறு சில பொருள்களுக்காகப் பண்டமாற்று செய்யப்பட்டன.

25. "சத்ரப்கள்" பற்றி நீவிர் அறிவது யாது?
- சாகர்கள் ஆட்சியில் சத்ரப்கள் மாகாண ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.
- சத்ரப்புகள் நடைமுறையில் சுதந்திர ஆட்சியாளர்களாயினர்.
- சாக சத்ரப்களில் புகழ்பெற்றவர் ருத்ரதாமன் ஆவார்.

26. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.
- சமுத்திரகுப்தரின் சாதனைகளை இது விளக்குகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- இதனைப் பொறித்தவர் ஹரிசேனர்.
- இது நாகரி வரி வடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது.

27. ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறு குறிப்பு வரைக.
- இரண்டாம் புலிக்கேசியின் சாதனைகளை விளக்குகிறது.
- இக்கல்வெட்டை பொறித்தவர் ரவிகீர்த்தி ஆவார்.
- சம்ஸ்கிருத மொழியில் 19 வரிகளில் இக்கல்வெட்டு உள்ளது.

28. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக.
- தமிழ் இலக்கியப் பரப்பில் சைவ, வைணவ இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன.
- குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறிவிளக்கம் ஆகிய முக்கிய இலக்கியங்களை இயற்றினார்.
- தாயுமானவர் சமரச சன்மார்க்கம் எனும் பக்திப்பாடல்களை இயற்றினார்.
- ராபர்ட் டி நொபிலி, வீரமாமுனிவர் ஆகியோர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்தனர்.

29. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
- சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது.
- இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது.
- பிரெஞ்சு-மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து இங்கு ஆவணங்களாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

30. மகல்வாரி முறை பற்றி சிறுகுறிப்பு வரைக.
- வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1833) மகல்வாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதன்படி நிலவருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரோடு மேற்கொள்ளப்பட்டது.
- ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்வோரிடமிருந்தே செய்துகொள்ளப்பட்டது.

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 3 = 21

31. இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்களைக் குறிப்பிடுக.

| | |
|---|---|
| பிகார் | பயிஸ்ரா |
| குஜராத் | லங்னஜ் |
| உத்திரப்பிரதேசம் | சோபனி மண்டோ, சாராய்நகர் ராய், மகாதகா, தம்தமா |
| கர்நாடகம் | கிப்பன ஹள்ளி |
| ஆந்திரம் | சனகனகல்லு |

32. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
- கால்நடை மேய்ச்சல் வாழ்க்கைமுறை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.
- கால்நடைகளை மையப்படுத்திய மோதல்கள் அன்றாடம் நடந்தன.
- கால்நடை மேய்ச்சலுக்கு அடுத்த நிலையில் வேளாண்மை முக்கிய இடம் வகித்தது.
- வர்ணக் கோட்பாடு இருந்த போதிலும் பொதுவாகச் சமூகத்தில் பாகுபாடுகள் ஆழமாக வேரூன்றவில்லை.

33. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
- காடுகளைத் திருத்துவதில் இரும்பு முக்கியப் பங்காற்றியது.
- இரும்புக் கலப்பைகளின் பயன்பாடு வேளாண் உற்பத்தியை மேம்படுத்தின.
- கைவினைப்பொருள் உற்பத்தி அதிகரித்ததில் இரும்புத் தொழில்நுட்பம் மிக முக்கியப் பங்காற்றியது.
- இறுதியில் இது நகரமயமாக்கத்துக்கு வழிவகுத்தது.

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

34. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நாம் அறிவது என்ன?

- அசோகரது ஆட்சியின் எட்டாவது ஆண்டில் கலிங்கப் போர் நடைபெற்றது.
- மௌரியர்கள் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்த படையெடுப்பு ஆகும்.
- போரில் கொல்லப்பட்டவர்கள், காயம் பட்டுப் பின்னர் இறந்தவர்கள் பல பத்தாயிரங்களாகும்.
- போரினால் ஏற்பட்ட துன்பங்களால் நெகிழ்ந்த அசோகர் பௌத்தராக மதம் மாறினார்.

35. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.

| திணை | சார்ந்த நிலம் | தொழில் |
|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடம் | வேட்டையாடுதல், உணவு சேகரித்தல். |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடம். | கால்நடை மேய்த்தல், மாற்றிட வேளாண்மை |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடம். | வேளாண்மை செய்வது தொழிலாகும். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடம். | மீன்பிடித்தல், உப்பு உற்பத்தி. |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடம். | கால்நடைத் திருட்டு, கொள்ளையடித்தல். |

36. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது." எவ்வாறு?

- மேற்குக் கடற்கரையில் இருந்த துறைமுகங்களில் மிகவும் பரபரப்பான வணிக மையம் முசிறி ஆகும்.
- நாட்டின் உள் பகுதியிலிருந்து அரிசியை ஏற்றி வந்த படகுகள் திரும்பி செல்லும்போது மீன்களை ஏற்றிச் செல்கின்றன.
- இது அடிப்படையான நுகர்வுப் பொருட்களின் வணிகத்தில் பண்டமாற்றுமுறை இருந்ததை காட்டுகிறது.
- அதே போன்று சந்தைக்கு கொண்டுவரப்பட்ட கருமிளகு மூட்டைகள் கப்பலில் வந்த தங்கத்திற்கு பண்டமாற்றம் செய்யப்பட்டன.

37. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச்சின்னங்கள்.

எல்லோரா :

- எல்லோரா குடைவரைக் கோவில் வளாகம் பௌத்த, சமண, இந்து மதச் சின்னங்களின் கலைநுட்பத்தைக் கொண்டுள்ளது.
- எல்லோராவில் சிறப்பானது ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோவிலாகும்.

<u>எலிஃபண்டா</u> :

- நடராஜர், சதாசிவன் போன்ற சிற்பங்கள் அழகிலும், கலைத்திறனிலும் சிறந்து விளங்குகின்றன.
- அர்த்த நாரீஸ்வரர், மகேசமூர்த்தி ஆகியோரின் சிலைகள் புகழ்பெற்ற சிற்பங்களாகும்.

38. இராஜேந்திர சோழன் 'கடாரம் கொண்டான்' என அழைக்கப்படுவது ஏன்?

- முதலாம் ராஜேந்திரன் கடற்படை மூலம் தென்கிழக்கு ஆசிய நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.
- அவரது கப்பற்படை ஸ்ரீ விஜயத்தை கைப்பற்றியது.
- குறுநில மன்னரிடமிருந்து கெடாவை ( கடாரம் ) கைப்பற்றினார்.
- கடாரத்தைக் கைப்பற்றியதால் ராஜேந்திரனுக்கு கடாரம் கொண்டான் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

39. ராக்சஷி தங்கடி போர் (1565)

- தக்காண சுல்தான்களுக்கும் விஜய நகரப் பேரரசிற்கும் இடையே இப்போர் நடைப்பெற்றது.
- விஜய நகரப் படைகளுக்கு ராமராஜர் தலைமை தாங்கினார்.
- போரில் விஜய நகரம் தோற்கடிக்கப்பட்டது. ராமராஜர் கொல்லப்பட்டார்.
- வெற்றிப் பெற்ற பாமினிப் படைகள் முதன் முதலாக விஜய நகருக்குள் நுழைந்தன.

40. 'நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன்முயற்சியாகும்'- எவ்வாறு?

- நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத பாடசாலைகள் ஆகியன தொடங்கப்பட்டன.

- நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.
- அரசவை மேன்மக்கள், வேதஅறிஞர்கள், ஆதரவற்றோர், ஏழைகள் என அனைவருக்கும் இப்பள்ளிகள் சேவை புரிந்தன.
- தஞ்சாவூர் மேன்மக்களுக்கு, ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 X 5 = 35

41. அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

<u>ஹரப்பா</u> :

- ஹரப்பாமக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தினர்.
- நகரங்கள் சட்டக வடிமைப்பைக் கொண்டிருந்தன.
- கழிவுநீர் வடிகால்கள் சரியான ஒழுங்குடன் கட்டப்பட்டன.
- வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டிருந்தன.

<u>மொகஞ்சதாரோ</u> :

- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம்.
- அது கோட்டைப் பகுதி, தாழ்வான நகரம் என இரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது.
- வீடுகளில் மேல்தளம் இருந்ததை உணர்த்தும் வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன.
- பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன் கூடிய முற்றம் அமைந்திருந்தது.

( அல்லது )

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

<u>ஆதிச்சநல்லூர்</u> :

- ஆதிச்சநல்லூர் திருநெல்வேலியிலிருந்து 22 கி.மீ தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- அதிக எண்ணிக்கையில் பல்வகைப்பட்ட தாழிகளும் மட்பாண்டங்களும் கிடைத்தன.
- ஆணிகள், இரும்பு ஆயுதங்கள், சில கல்மணிகள், ஒரு சில தங்க நகைகள் கிடைத்தன.

<u>பையம்பள்ளி</u> :

- பையம்பள்ளி, வேலூர்மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவைச் சேர்ந்த கிராமமாகும்.
- கருப்பு மற்றும் சிகப்பு நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டன.
- பெரும் எண்ணிக்கையிலான ஈமத்தாழிகளும் கண்டறியப்பட்டன.

<u>கொடுமணல்</u> :

- ஈரோட்டிலிருந்து 40 கி.மீ தொலைவில், நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது.
- இங்கு ரோமானிய நாணயக் குவியல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- கொடுமணல் அகழ்வாய்வில் கிடைத்தவை சங்க காலத்தைச் சேர்ந்தவையாகும்

42. அ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

- நன்னம்பிக்கை : நான்கு உயர் உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டும்.
- நல்லார்வம்; பொருளாசை மற்றும் தீய எண்ணத்தை கைவிட வேண்டும்.
- நல்வாய்மை : உண்மையை பேச வேண்டும்.
- நற்செயல் : நடுநிலையோடு கடமையை நிறைவேற்றுதல்.
- நல்வாழ்க்கைமுறை : நேர்மையான வருமானம்.
- நன்முயற்சி : நல்ல உணர்வுகளையும் முயற்சிகளையும் வளர்த்தல்.
- நற்சிந்தனை : எண்ணம், சொல், செயலில் தூய்மையாக இருக்க வேண்டும்.
- நல்லதியானம் : தியானம் மற்றும் ஆன்மீகத்தில் கவனம் செலுத்துதல்.

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

( அல்லது )

ஆ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.

- அசோகரால் வெளியிடப்பட்ட 14 பாறை கல்வெட்டுள், 2 கலிங்க கல்வெட்டுகள், 7 தூண் கல்வெட்டுகள், சில சிறு பாறை கல்வெட்டுகள், என மொத்தம் 33 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.
- இந்தக் கல்வெட்டுக் கட்டளைகள் பெரும்பாலும் பிராமி எழுத்து முறையில் அமைந்துள்ளன.
- சில கல்வெட்டுக் கட்டளைகள் மகதி மற்றும் பிராகிருதத்திலும் அமைந்துள்ளன.
- காந்தஹார் பிரகடனங்கள் கிரேக்கத்திலும், அராமிக்கிலும் உள்ளன.
- வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள இரண்டு கல்வெட்டுக் கட்டளைகள் கரோஷ்டி எழுத்தில் உள்ளன.
- அவரது இரண்டாவது அரசாணை அவரது பேரரசின் எல்லைக்கு வெளியேயான நிலப்பரப்புகளைக் கூறுகிறது.
- மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் பார்க்க மருத்துவமனைகளைத் திறக்க உத்தரவிட்டதை 2 ஆம் பாறைக் கல்வெட்டு கூறுகின்றது.
- எல்லா மதத் துறவிகளுக்கும் மரியாதை தரப்படவேண்டும் என்று 7 & 12 ஆம் பாறைக் கல்வெட்டு கூறுகின்றது.

43. அ) "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்". விவாதிக்கவும்

- குப்த அரசுதான் துணைக்கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.
- வணிகக்குழு முறை, கடல்கடந்தவாணிபம் ஆகியவற்றுடன் அதன் பொருளாதாரம் எழுச்சி கண்டது.
- இக்காலகட்டத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புகள் தோன்றின.
- நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலைஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது
- உயர் வர்க்கத்தினரின் வாழ்க்கைமுறை உச்சத்தில் இருந்தது.
- கல்வி, கலை, அறிவியல் ஆகியவை சிறந்தோங்கி இருந்தது.
- இக்காலகட்டத்தில் நிலப்பிரபுத்துவம் ஒரு நிறுவனமாக வேரூன்றத் தொடங்கியது.
- நிலப்பிரபுத்துவம் காரணமாக மக்கள் துன்புற்றார்கள்.
- எனவே 'குப்தர் காலம் பொற்காலம்' என்பதை விட, பண்பாட்டு மலர்ச்சி, செவ்வியல் கலைகளின் காலம் என்பதே பொருத்தமாக இருக்கும்.

( அல்லது )

ஆ) ஹர்ஷரின் வட இந்திய படையெடுப்புகள் குறித்து விவரி ?

- சிற்றரசுகளின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவற்றை தம் பேரரசோடு இணைத்துக் கொண்டார்.
- மாளவ மன்னன் தேவகுப்தனை கொன்று அப்பகுதியை இணைத்துக் கொண்டார்.
- வங்காளத்தை ஆண்ட கௌட அரசன் சசாங்கன் முறியடிக்கப்பட்டனர்.
- வல்லபியை ஆண்ட மைத்ரகர்களும் முறியடிக்கப்பட்டனர்.
- புரோச் பகுதியின் கூர்ஜரர்களை ஹர்ஷர் தோற்கடித்தார்.
- ஹர்ஷரது ஆட்சிப் பகுதி ஜலந்தர், காஷ்மீர், நேபாளம், வல்லபி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.
- கங்கை – யமுனை நதிகளுக்குட்பட்ட பகுதிகள் அவரது கட்டுப்பாட்டில் இருந்தன.

44. அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக.

- மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்கள் முதலாம் ராஜசிம்மன் ஆட்சிக்காலத்தில் எழுப்பியதாகும்.
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டது.
- இம்மூன்றில் சிவன், விஷ்ணு கடவுள்களின் கருவறை முக்கியமானதாகும்.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் இக்கோவில்களின் சிறப்பம்சமாகும்.
- இங்குள்ள ஒற்றைக்கல் ரதங்கள் பஞ்சப்பாண்டவர் ரதங்கள் என்று அறியப்படுகின்றன.
- பஞ்சப்பாண்டவர் ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜா ரதமாகும்.
- பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தையும் அழகான சிற்பங்களையும் கொண்டுள்ளது.
- கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கி வரும் சிற்பம் சிறந்த கலை வெளிப்பாடு ஆகும்.

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

- கிருஷ்ண மண்டபச் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள பசுக் கூட்டங்கள் போன்ற கிராமத்து காட்சிகள் கலை அதிசயமாகும்.

( அல்லது )

ஆ) கோயில்-ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

- சோழர் காலத்தில் கோவில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக இயங்கின.
- சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாகக் கோவில்கள் விளங்கின.
- கோவில் அதிகாரிகள் கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவித்தனர்.
- கோவில்களில் பாடப்பட்ட வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்தன.
- தஞ்சை பெரிய கோவிலில் தமிழ் மரபு இசைக்கருவிகள் சிற்பங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன.
- கடன் வழங்குதல், கொடைகளை வழங்குதல்,பெறுதல் ஆகிய செயல்கள் மூலம் கோவில்கள் வங்கிகள் போன்று இயங்கின.
- வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோவில் ஒரு கல்வி நிறுவனமாகவும் விளங்கியது.
- சிற்ப வேலைகளும் உலோக வேலைகளும் ஊக்குவிக்கப்பட்டன.

45. அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

- பக்தி இயக்கச் சீர்த்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.
- இறைவனுடைய அருளைப் பெற அர்ப்பணிப்பை வற்புறுத்தினர்.
- குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும் என்றனர்.
- உலக சகோதரத்துவம் எனும் கொள்கையைப் போதித்தனர்.
- உருவ வழிபாட்டைவிமர்சனம் செய்தனர்.
- ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடவேண்டுமென வலியுறுத்தினர்.
- சடங்குகள் , சம்பிரதாயங்கள் , புனித யாத்திரைகள், விருந்துகள், சாதிமுறை ஆகியவற்றைக் கண்டனம் செய்தனர்.

46. அ) முகலாயக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

- கூண்டு வடிவிலான குமிழ்களைக்கொண்ட கவிகை மாடங்களாலும், ஒப்பனைகள் மிகுந்த கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்களாலும், ஸ்தூபி மாடங்களாலும் கட்டிடங்கள் கட்டப்பட்டன.
- பாரசீகக் கட்டடக்கலை வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இந்தியக் கலைஞர்களால் ஹுமாயூனின் கல்லறை கட்டப்பட்டது.
- ஆக்ரா கோட்டை மணற் கற்பாறைகளால் ரஜபுத்திர பாணிகளை இணைத்துக் கட்டப்பட்டது.
- ஆக்ரா கோட்டையிலிருக்கும் மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கற்களாலானது.
- தாஜ்மஹால் முழுவதும் பளிங்குக் கற்களால் உயர்த்தப்பட்ட தளத்தின் மீது கட்டப்பட்டது.
- ஷாஜகான், ஷாஜகானாபாத் என்ற பெயரில் ஒரு நகரத்தையே உருவாக்கினார்.
- ஷாஜகானாபாத்தில் செங்கோட்டையும் ஜும்மா மசூதியும் அமைந்துள்ளன.
- திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால், போன்ற பிரமிப்பூட்டும் கட்டடங்களால் செங்கோட்டை சூழப்பட்டுள்ளது.
- ஔரங்கசீப் காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது.

( அல்லது )

ஆ) நவீனக் கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

- ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நிறுவினார்.
- தஞ்சாவூரில் உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார்.
- நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத பாடசாலைகள் ஆகியவற்றை தொடங்கினார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.
- அரசவை மேன்மக்கள், வேதஅறிஞர்கள், ஆதரவற்றோர், ஏழைகள் என அனைவருக்கும் இப்பள்ளிகள் சேவை புரிந்தன.
- தஞ்சாவூர் மேன்மக்களுக்கு, ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து.
- சரபோஜியின் புதிய முன்முயற்சிகள் தஞ்சாவூர் மேன்மக்களுக்கு அப்போதைய காலனி ஆதிக்கச் சமூக மற்றும் பொருளாதார முறைமைக்குள் நுழைய வழி செய்தன.
- மதப்பரப்பாளர்கள் கந்தன்குடியில் நடத்திய ஏழைக் கிறித்தவ மாணவர்களுக்கான பள்ளியை ஆதரித்தார்.

47. அ) 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்களையும் மற்றும் விளைவுகளையும் விவரிக்கவும்.

<u>காரணங்கள்</u>:


- டல்ஹௌசியின் நாடிணைப்பு கொள்கையும், வரிசு இழப்புக் கொள்கையும் மக்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தியது.
- ஆங்கில மொழியும், மேலைக்கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டதால் முஸ்லீம் அறிவுஜீவிகள் துயரத்திற்கு ஆளாயினர்.
- சதிஒழிப்புச் சட்டம், விதவை மறுமண சட்டம், சிசுக்கொலை சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டு துப்பாக்கியில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது புரட்சிக்கு உடனடி காரணமாய் அமைந்தது.

<u>விளைவுகள்:</u>

- இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசுச் செயலர் மூலம் ஆளப்படும்.
- பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.
- கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டுக் குழுவும் ஒழிக்கப்பட்டன.
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் நாடிணைப்புக் கொள்கையும் கைவிடப்பட்டது.
- கிழக்கிந்தியக் கம்பெனியின் படை கலைக்கப்பட்டு இங்கிலாந்து அரசின்படைகளோடு இணைக்கப்பட்டது.

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

46. ஆ) மராட்டிய சிவாஜியின் ஆட்சிகால நிகழ்வுகளில் ஏதேனும் ஐந்தினை காலக்கோடு வரைந்து காட்டுக.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

45. ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பாமினி, விஜயநகர அரசுகள் ஆட்சி செய்த பின்வரும் எல்லைகளை குறித்து காட்டுக. 1.சூரத் 2. கோவா 3. மதுரை 4. ஹம்பி 5. அகமது நகர்.

## INDIA - OUTLINE

Name : பாமின், விஜயநக
Std. :
Section :




FOR SCHOOL USE ONLY

www.Padasalai.Net